Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 308

சனிக்கிழமை 30 செப்ரெம்பர் 2023

புரட்டாதி 13 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல், அழுத்தம்

# யாழில் 4ஆம் திகதி மனிதச்சங்கிலிப் போர்!

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 30**

**முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி ரி.சரவண ராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தமை, தீர்ப்பை மாற்றுமாறு அழுத்தம் வழங்கியமை தொடர்பில் தமிழர் தாயகத்தில் தீவிரமான போராட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்படி யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி மனிதச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் தொடர்ச்சியாக விரைவில் முல்லைத்தீவை முடக்கிப் போராடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

»11

### நீதிக்கு நீதிகோரி கிளி.யிலும் போர்!

கிளிநொச்சி, செப். 30
முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவண ராஜா, தனது பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்

»12

நீதிபதி சரவணராஜாவின் நிலை

### அனைத்து நீதிபதிகளுக்கும் ஒரு சிவப்பு எச்சரிக்கையே!

யாழ்ப்பாணம், செப். 30
முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நேர்ந்த நிலை, அனைத்து நீதிபதிகளுக்குமான ஒரு

»11

குருந்தூர்விகாரை தொல்பொருள் சின்னம்

### இனப்பதற்றம் ஏற்படாமல் விடயத்தைக் கையாள்க!

பாடமெடுக்கிறது அஸ்கிரிய பீடம்

கொழும்பு, செப். 30
குருந்தூர்மலை ஒரு தொல்பொருள் சின்னம். வடக்கு- கிழக்கிலுள்ள பௌத்த

»11

ஊற்றுப்புலக் கொலை:

### தேடப்பட்ட நபர் கைது

கிளி., செப். 30
கிளிநொச்சி, ஊற்றுப்புலம் பகுதியில் கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற கொலை தொடர்பிலும், இதர சில குற்றச்செயல்களுக்காகவும் தேடப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சிப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

»11

### சிங்கள – பௌத்த நிகழ்ச்சி நிரலால் தமிழ் நீதிபதிகள் மீது அச்சுறுத்தல்!

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 30
வடக்குக் கிழக்கில் பணியாற்றும் நீதிபதிகள் அச்சுறுத்தப்படுவதற்கு அடிப்படையான காரணமாக அமைவது இலங்கை அரசினது சிங்கள-பௌத்த நிகழ்ச்சி நிரலே என்று

»11

### சிவன்கோவில் காணிக்குள் புத்தரை வைக்க முனைப்பு

பொதுமக்கள் போராட்டம் கைவிடப்பட்டது திட்டம்

முல்லைத்தீவு, செப். 30
முல்லைத்தீவு - திருமுறிகண்டி, செல்வபுரம் பகுதியில் சர்ச்சைக்குரிய காணியொன்றுக்குள் புத்தர்சிலை வைக்க நேற்று எடுக்கப்பட்ட நடவடிக்கை பொதுமக்களின் எதிர்ப்பையடுத்துக் கைவிடப்பட்டது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

»11

சரத் வீரசேகரவின் காலத்தில்

### அதிகளவு தமிழ் மக்கள் காணாமலாக்கப்பட்டிருப்பர்



கொழும்பு, செப். 30
நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றத்துக்குக் காரணமாகச் செயற்பட்ட சரத் வீரசேகரவின் காலத்தில், வடமாகாணத்தில் அதிகளவான தமிழ் மக்கள் காணாமலாக்கப்பட்டிருப்பர் என்று எண்ணத்தோன்றுகின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

»11

உருக்குலைந்த

### சடலம் மீட்பு!

மன்னார், செப். 30
மன்னார், முத்தரிப்புத்துறை கடற்கரை ஓடைப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.
முத்தரிப்புத்துறைமீனவர்கள் சடலத்தை அவதானித்து, வழங்கிய தகவல்களின் அடிப்படை

»11

நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தில்



### நித்தியஸ்ரீயின் கச்சேரியோடு கப்பல் திருவிழா இன்று!

யாழ்ப்பாணம், செப். 30
வரலாற்று பிரசித்திபெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயக் கப்பல் திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.
நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார மகோற்சவம் கடந்த 24ஆம் திகதி

»11

### மாணவி வழங்கிய சொக்லெட்டால் மருத்துவமனையில் மாணவன்!

யாழ்ப்பாணம், செப். 30
பாடசாலையில் வைத்து மாணவி ஒருவர் கொடுத்த சொக்லேட்டை வாங்கிய மாணவன் ஒருவன், மாணவியின் அண்ணனால் தாக்கப்பட்டதையடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மாணவியின் அண்ணனின் தவறான புரிதலே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ., சீனா, இந்தியாவிலிருந்து வரும் நெருக்கடிகளுக்கு பழகிப்போய்விட்டோம்



## ஜேர்மன் மாநாட்டில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 30

**இலங்கை போன்ற நாடுகள் அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து வரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கப் பழகியுள்ளதாகவும் அது புதியதொரு விடயமல்ல எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஜேர்மனியின் பேர்லின் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'பேர்லின் குளோபல்' மாநாட்டின் முதல் நாளில் அரச தலைவர்களுக்கான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

2024ஆம் ஆண்டு உலகளாவிய சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வலுவான சர்வதேச திட்டமிடலுக்காக மேற்குலக நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பிய சங்கமும் சீனாவுடன் தீர்மானமிக்க கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். அதேபோல் 'ஒரே தீர்மானம் ஒரே பாதை' என்ற கூட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை போன்ற நாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதோடு, இதனால் உலக பொருளாதார நெருக்கடிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்கு வழங்கியிருந்த ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார். பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது, அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் இடையிலான வேறுபாடுகளே இறையாண்மைக் கடன் நெருக்கடிகளுக்குக் காரணமாக அமைந்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அபிவிருத்தி அடைந்துவரும் பல நாடுகள் எதிர்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க அளவிலான கடன் நெருக்கடி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற தற்போதைய பொறிமுறைகளில் காணப்படும் கட்டுப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொண்டு மேலும் நெருக்கடி நிலைமைகள் உருவாவதைத் தவிர்ப்பதற்கான அவசர வேலைத்திட்டங்கள் அவசியம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்- என்றுள்ளது. (ஒ-44)

# துப்பாக்கி அனுமதி புதுப்பிக்க காலக்கெடு

கொழும்பு, செப். 30

துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கை நாளை முதலாம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியின் பின்னர் 2024 ஆம் ஆண்டுக்கான துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் மேற்கொள்ளப்படமாட்டாது.

அத்துடன் இந்தக் காலக்கெடுவுக்குப் பின் மேற்கொள்ளப்படும் புதுப்பித்தல்களுக்கு அபராதம் விதிக்கப்படும் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# ஒட்டுண்ணிப் பூச்சியால் பரவும் தோல் நோய்கள்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

நாட்டின் வறண்ட பிரதேசங்களில் மக்களின் வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் 'வெலிமஸ்ஸ' என்ற ஒட்டுண்ணிப் பூச்சியால் பரவும் தோல் நோய் தொடர்பில் சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் ஹசலக்க மற்றும் மஹியங்கனை பிரதேசங்களில் இந்த பூச்சியின் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இனங்காணப்படலாம். இந்தப் பூச்சி, தண்ணீர் தேங்கும் குளிர்ந்த இடங்களில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கிறது.

இந்த நோய் மற்றும் அது தொடர்பான சிகிச்சைகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படுகிறது.

வலி, புண் அல்லது கட்டி, கடி என்று சந்தேகிக்கப்படும் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாடி சிகிச்சை பெறவேண்டும் என்றும் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



# மூன்றாவது தடவையாகவும் உடைக்கப்பட்ட சொரூபம்

யாழ்., செப். 30

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தனிப்பனை வடக்கில் தனியார் காணிகுள் இருந்த மாதா சொரூபம் மூன்றாவது தடவையாகவும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

நபர் ஒருவர் மதுபோதையில் அட்டகாசம் செய்வதாக மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதனை அறிந்த அந்த நபர் நேற்றுமுன்தினம் இரவு காணிக்குள் அத்துமீறி நுழைந்து அங்கே நிறுவப்பட்டிருந்த மாதா சொரூபத்தை அடித்து நொருக்கியுள்ளார்.

குறித்த நபர் மாதா சொரூபத்தை மூன்றாவது தடவையாக அடித்து நொருக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-27)

# இந்தியாவிலிருந்து தரமற்ற முட்டைகள்

## உணவக உரிமையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 30

இந்தியாவிலிருந்து தரம் குறைந்த முட்டைகளே இறக்குமதி செய்யப்பட்டு நாட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன என்று அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாளாந்தம் இந்தியாவிலிருந்து அகற்றப்படும் பாவனைக்குதவாத முட்டைகள் இந்த நாட்டுக்குக் கொண்டு வரப்படுகின்றன.

குறைந்த விலைக்கு முட்டைகள் கிடைத்தாலும் சந்தைக்கு வரும்போது விலை அதிகரிப்புச் செய்யப்படுகிறது.

இந்திய முட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வதன்மூலம் கொடுக்கல் - வாங்கல்களில் ஊழல் நடைபெறுகிறது. இதனை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன்- என்றார். (ச-இ)

# தந்தை செல்வா நற்பணிமன்றத்தால் மாணவர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 30

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் சங்கானை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து கொண்டு தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு தந்தை செல்வா நற்பணிமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமூக சேவையாளர்களுக்கான விருதுகளையும் வழங்கி வைத்தார்.

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் தளையரட்ணம், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்களான ச.ஜெயந்தன், சிறிஜீவா, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



தந்தை செல்வா நற்பணிமன்றத்தால் வருடா வருடம் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வழிப்படுத்தல் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-125)

# வல்லுநர்கள் வெளியேறல் நாடாளுமன்றில் விவாதம்

கொழும்பு, செப். 30

பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் போக்குத் தொடர்பில் எதிர்வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்தநிலையிலேயே எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் போக்கு தொடர்பான 'ஒத்திவைப்பு வேளை விவாதம்' ஒக்ரோபர் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொருளாதார நெருக்கடி எதிரொலி

# நாட்டில் அதிகரிக்கின்றன கருத்தடை சிகிச்சைகள்!

## மத்திய வங்கி அறிக்கையில் தகவல்

**கொழும்பு, செப். 30**

**இலங்கையில் கடந்த ஆறு ஆண்டுகளில் 2022ஆம் ஆண்டிலேயே அதிக எண்ணிக்கையிலான கருத்தடைச் சத்திரசிகிச்சைகள் பதிவாகியுள்ளன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிவரங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 2022 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 58 ஆயிரத்து 235 பேர் புதிதாக குடும்பக் கட்டுப்பாட்டுக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.

அவர்களில் 30 ஆயிரத்து 719 பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டில், இலங்கையில் 2 இலட்சத்து 25 ஆயிரத்து 492 பேர் குடும்பக் கட்டுப் பாட்டுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

அந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டில் 32 ஆயிரத்து 743 பேர் புதிதாக குடும்பக் கட்டுப்பாட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த ஆறு ஆண்டுகளில், 2022 ஆம் ஆண்டிலேயே அதிக எண்ணிக்கையிலான கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாகவே கடந்த வருடத்தில் அதிகமானோர் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை நாடியுள்ளனர் என்று சமூக வியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(ச-இ)

# புற்றுநோயால் 900 சிறுவர்கள் பாதிப்பு!

இலங்கையில் நாளொன்றுக்கு 12 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். அதேவேளை வருடந்தோறும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 900 சிறுவர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் புற்றுநோயியல் நிபுணர்கள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் மருத்துவர் விமுக்தி பீரிஸ் தெரிவிக்கையில்,

நாளொன்றுக்கு 12 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பரிசோதனைகளுக்காக மார்பக சுயபரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மூலம் இந்த நிலையைக் கட்டுப்படுத்த முடியும்.

அதேவேளை புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களாக வருடந்தோறும் சுமார் 900 குழந்தைகள் கண்டறியப்படுகின்றன.

19 வயதுக்குட்பட்டவர்களுக்கு ஏற்படும் புற்றுநோய் குழந்தைப் புற்றுநோய் என அடையாளப்படுத்தப்படுகின்றது.

குழந்தைப் புற்றுநோயாளர்கள் தொடர்பில் ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதம் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன - என்றார். (ச-இ)

## பெரும்போகம் ஆரம்பம்

# கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

யாழ்ப்பாணம், செப். 30

பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும் என்று கமக்கார அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன.

தற்போது பெரும்போக பயிர்ச்செய்கைக்காக வயல்கள் உழுது நெல் விதைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்த வேளையில் மேய்ச்சலுக்காக அவிழ்த்துவிடப்படும் கால்நடைகளைக் கால்நடைவளர்ப்போர் கட்டி வளர்க்கவேண்டும். தவறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கமக்கார அமைப்புகள் அறிவுறுத்தின. (ச-17)


# கோப்பாய், நீர்வேலியில் குரங்குகள் அட்டகாசம்!

யாழ்ப்பாணம், செப். 30

கோப்பாய், நீர்வேலி பிரதேசத்தில் கட்டாக்காலி குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிகளுக்குள் நுழையும் குரங்குகள் தென்னை மரங்கள் மற்றும் பயன்தரும் மரங்களில் காய்க்கும் பழங்கள், காய்களை சேதமாக்கிச் செல்கின்றன. அத்துடன் வீடுகள், ஆலயங்களின் கூரைகளை உடைத்து சேதப்படுத்துகின்றன என்றும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தக் குரங்குகள் தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து வருகின்றன என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ச-17)



## பெரும்போக நெல்விதைப்பு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 30

பெரும்போக நெற் செய்கைக்கான நெல்விதைப்பு யாழ். மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ளது.

செம்மணிப் பிரதேசத்தில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. சமய சம்பிரதாய முறைப்படி விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து விவசாயிகள் பண்படுத்திய [illegible] வயல் நிலங்களில் நெல்விதைப்பில் ஈடுபட்டனர். (ச-20-17)




'சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது. அதைத் திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது' எண்டொரு எம்.ஜி.ஆர் பாட்டைக் கேட்டிருப்பியள். என்னதான் நல்லது செய்யவெண்டு ஆயிரம் சட்டம் போட்டாலும் அதை எப்பிடி உடைச்சு உழைக்க வழிபாக்கலாம் எண்டுதான் எல்லாரும் யோசிக்கினமே தவிர, அப்பிடியான சட்டங்களைச் சரியாப் பின்பற்றுறவை சரியான குறைவுதான். அதுவும் இயமனுக்கே இடியப்பம் தீத்தின எங்கட யாழ்ப்பாணத்துக்காரரைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை.

வெள்ளியும், ஞாயிறும் ரியூசன் வகுப்புகள் வைக்கக்கூடாது எண்டு அரசாங்க அதிபர் யாழ்ப்பாணத்தில ஒரு ஓர்டர் போட்டவர். இப்பத்தைப் பிள்ளையள் எந்தநேரமும் ரியூசன், ரியூசன் எண்டு அலைஞ்சு ஒரு ஆறுதல் இல்லாமல், பிறகு மனவுளைச்சல் அது இதெண்டு தறிகெட்டுப் போகாமல் இருக்கத்தான் இந்தமுறையை அரசாங்க அதிபர் கொண்டந்தவர். எல்லாரும் இப்பிடி ஒரு முறையை இஞ்ச கொண்டந்ததுக்கு பாராட்டவும் செய்தவை. ஆனாலும் ஒவ்வொரு நாளும் கிளாஸ் வைச்சு ருசி கண்ட சில ரியூசன்காரருக்கு இந்தத் திட்டம் பிடிக்கேலை. அதால இதைக் குழப்பவெண்டு என்னென்னவோ திருகுதாளமெல்லாம் செய்துபார்த்தும் அரசாங்க அதிபர் அசைஞ்சு குடுக்கேலை. வேறவழியில்லாமல் அவையும் வெள்ளியும், ஞாயிறும் வகுப்பு வைக்காமல் பிள்ளையளுக்கு லீவு குடுக்கத்தான் செய்யினம்.

ஆனால் ருசி கண்ட வாயும், பணம் பார்த்த கையும் பரபரக்கத்தானே செய்யும். அதால இப்ப வேற வேற வழியளில மொட்டைக் கடிதங்கள் போடுகினம். 'எங்கட பிள்ளையள் கிளாஸ் இல்லாமல் படிப்பில குறைய மார்க்ஸ் எடுக்கினம்.வெள்ளி, ஞாயிறு கிளாஸ் இல்லாததால ரியூசன்காரர் சிலபஸ்ஸை முடிக்காமல் விடுகினம்' எண்டு பெற்றார் எழுதுற மாதிரி கடிதங்கள் மேல்மட்டம், கீழ்மட்டம் எண்டு எல்லா மட்டத்துக்கும் அடிக்கடி போகத் தொடங்கியிருக்கு. அதைவிட இன்னும் சில மண்டைவளமுள்ள ரியூசன்காரர் தகவலறியும் உரிமைச் சட்டத்தை வைச்சு, கச்சேரியில கடிதமழை பொழிஞ்சு கொண்டிருக்கினம்.

'ரியூசன்களை வெள்ளி, ஞாயிறு கிளாஸ் வைக்காமல் தடுக்க அரசாங்க அதிபருக்கு உரிமை இருக்கோ?'

'ரண்டுநாளும் ரியூசன் வைக்கக்கூடாது எண்ட முடிவை பெற்றோரோடை கதைச்சோ முடிவு செய்தனீங்கள்?'

'எல்லா ரியூசன்காரரோடையும் கதைக்காமல், எப்பிடி இப்பிடி ஒரு முடிவை எடுக்கலாம்?'

எண்டமாதிரி கேள்வியளைப் போட்டு கச்சேரிக்கு அனுப்பிக் கொண்டேயிருக்கினமாம். எங்கட பிள்ளையள் கிழமையில ரண்டுநாள் நிம்மதியா இருக்கிறதும், அறநெறி வகுப்புகளுக்கு போறதும், விரும்பின இடங்களுக்கு பெற்றாரோட போய் வாறதும் பிடிக்காமல், 'எங்கட உழைப்புத்தான் முக்கியம்' எண்டமாதிரி நல்ல திட்டமொண்டைக் குழப்ப நினைக்கிறவையை என்னதான் செய்யலாம்?



- பட்சி


padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைக்காடு ம.வி பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 30
அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்த வெளி அரங்கத்தில் அதிபர் கு. அகிலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வெளிநாட்டு சேவை பிரதிப் பணிப்பாளரும் பழைய மாணவருமான குமாரசாமி கிரிதரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பஞ்சராசா சுரேந்திரன், அரச தொழில்நுட்ப பொறியியலாளர் சுப்பிரமணியம் சிவகுமார், ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி சியாமிளா சிவகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)



நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை பக்தர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (ச-17-9)

## சூழல் விழிப்புணர்வு பொதுஅறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 30
தேசிய பசுமை இயக்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் பசுமை அமைதி விருதுகளுக்குரிய இணையவழி சூழல் பொதுஅறிவுப் பரீட்சை இந்த முறையும் நடத்தப்படவுள்ளது.

மாணவர்களிடையே சூழற் கல்வி, சூழல் விழிப்புணர்வு, சூழற் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

முதல் மூன்று இடங்களைப்பெறும் மாணவர்களுக்கு முறையே சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்த தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்கள் வழங்கி மதிக்கப்படுவர்.

மேலதிக விவரங்களை www.tamilnational green.org எனும் இணையத்தினுள் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## 'வெந்து தணிந்தது' நாடக நூல் அறிமுகம்

மா.ரூபவதனனின் 'வெந்து தணிந்தது' நாடக நூல் அறிமுக அரங்கு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இணுவில் கோயில் வீதி அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனம் பேராயர் பேரருட் கலாநிதி வேலுப்பிள்ளை பத்மதயாளன் முன்னிலையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கம், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கி.விசாகரூபன், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் எம்.மணிசேகரன், சட்டத்தரணி ப.ஐங்கரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி இருக்கும். சகோதரர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை.

**இடபம்:** அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றிக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**மிதுனம்:** நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் புது இடத்துக்கு கடையை மாற்றுவீர்கள்.

**கடகம்:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**சிம்மம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்சினைகள் தலைதூக்கும். குடும்பத்தில் எல்லாவற்றையும் நீங்களே இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் சில சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும்.

**விருச்சிகம் :** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம் பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**தனுசு:** முக்கியமான பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மகளுக்கு நல்ல வரன் அமையும். வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும்

**மகரம்:** குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். வாகனப் பழுதைச் சரி செய்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள்.

**கும்பம்:** கடந்த இரண்டு நாள்களாக கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும்.

**மீனம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். சிலர் உங்களைச் சீண்டிப்பார்ப்பார்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள்.

## நீதிபதிகளின் சுயாதீனத்தை கட்டாயம் பாதுகாக்கவேண்டும்

### எம்.ஏ.சுமந்திரன் உரை

நீதித்துறையைப் பாதுகாப்பது என்பது அவர்கள் எது செய்தாலும் பாதுகாப்பது என்பது அல்ல. நீதிபதிகள் சுயாதீனமானதாகச் செயற்படுவதை நாங்கள் பாதுகாப்பதே என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எங்களது நாட்டின் சரித்திரத்திலே நீதிபதி ஒருவர் தன்னுடைய உயிர் பாதுகாப்புக்காக, அதிலும் தான் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் எழுந்திருக்கின்ற அச்சுறுத்தல் காரணமாக வெளியேறியுள்ளார் என இன்றைய பத்திரிகைச் செய்திகள் சொல்கின்றன. இது நீதித்துறைக்கு ஏற்பட்டுள்ள ஓர் அச்சுறுத்தல். நாட்டில் உள்ள சுயாதீன நிறுவனங்களைப் பாதுகாக்கின்ற கடப்பாடு எங்கள் அனைவருக்கும் இருக்கிறது. அப்படியான மிகவும் முக்கியமான சுயாதீனமான நிறுவனமாக நீதித்துறையானது இருக்கிறது. நீதித்துறையைப் பாதுகாக்கின்றபோது நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை நாங்கள் கண்டிக்கவேண்டும், தடுக்கவேண்டும். அதேவேளையிலே நீதித்துறைக்கு உள்ளேயே தவறுகள் இருந்தால் அதனைத் திருத்துகின்ற வகையிலே நாங்கள் செயற்பட்டுக் கொள்ளவேண்டும். நீதித்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்ற போது மூன்று விதங்களிலே அவர்கள் செயற்படுவார்கள். அந்த அச்சுறுத்தலைக் கணக்கெடுக்காது தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்து விடலாம். இரண்டாவது அப்படியான அச்சுறுத்தல் வந்தால் அவர்கள் பதவி விலகி அதில் இருந்து விலகி விடுவார்கள். மூன்றாவதாக, நீதிபதிகள் அந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகி, அதற்கு அடங்கி தங்களுடைய நடத்தையை அல்லது தீர்ப்பை மாற்றி மற்றவர்களுடைய கைப் பொம்மைகளாக மாறி இயங்குவார்கள். இவை அனைத்தும் தடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ-20)

## பண்பாட்டுப் பெருவிழா

கிளிநொச்சி, செப். 30
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பூநகரி பண்பாட்டுப் பேரவையும் பூநகரி பிரதேசசெயலகமும் இணைந்து நடத்தும் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முக்கொம்பன் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## யாழ். இந்துக் கல்லூரியில் சுகாதார மேம்பாட்டு அலகு

யாழ்ப்பாணம், செப். 30
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன் அமரர் மருத்துவர் வேலாயுதம் சாரங்கன் நினைவாக கல்லூரியில் புனரமைக்கப்பட்ட சுகாதார மேம்பாட்டு அலகு திறப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அமரரின் பெற்றோரின் நிதிப்பங்களிப்பில் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் இந்த அலகு புனரமைக்கப்பட்டு கையளிக்கப்படுகிறது. (ச-9)

## ஊரிப்பிட்டி இந்துமயான பெயர்ப்பலகை திரைநீக்கம்



சாவகச்சேரி - மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்து மயான பெயர்ப்பலகை திரைநீக்கமும் மயான வளாகத்தில் மரக்கன்றுகள் நடுகை நிகழ்வும் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

மயான அபிவிருத்திச்சபைத் தலைவர் கா.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் சந்திரகுமார், ஆசிரியர் சுதேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். பற்றைக்காடாகக் காணப்பட்ட இந்த மயானம் மயான அபிவிருத்திச்சபையினரின் பங்களிப்பில் சீரமைப்புச்செய்யப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மகாவம்ச மனோநிலை மாறவேமாறாது!

2013ஆம் ஆண்டு இந்த நாட்டின் பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்க, ஆட்சித் தரப்பால் அவமானப்படுத்தப்பட்டு வலுக்கட்டாயமாக பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். ஆட்சியாளர்கள் எதிர்பார்த்த தீர்ப்புக் கிடைக்கவில்லை என்பதற்காக அவருக்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டு அநாகரிமான வகையில் அவர் வெளியேற்றப்பட்டிருந்தார். ஜனநாயகத்தின் மீதான ராஜபக்சக்களின் தாக்குதலாக இதனைச் சர்வதேச சமூகம் அடையாளப்படுத்தியிருந்தது. இந்தவிவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மனதில்வைத்தே, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிமாற்றம் ஒன்றைக் கொண்டுவரவேண்டுமென்ற தீவிரத்தோடு.சர்வதேச சமூகம் பணியாற்றியிருந்தது. ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. ஆனால் நாட்டின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை என்பதையே உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியைத்துறக்கும் நிர்ப்பந்தம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவுக்கு ஏற்பட்டுள்ளமை வெளிப்படுத்தியுள்ளது . வெறும் நபர்களையோ, முகங்களையோ மாற்றுவதால் மட்டும் நாட்டின் கட்டமைப்பு மாறும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பது தவறு. இலங்கையின் அரச கட்டமைப்பின் ஒவ்வொரு செங்கல்லும் சிங்கள – பௌத்த சித்தாந்தம் என்ற சிமெந்தால் இறுகக்கட்டப்பட்டுள்ளது. அந்தக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் ஆட்சியாளர்களின் முகங்களை மாற்றுவதால் மட்டும் எந்தப் பயனும் இல்லை என்பதை இப்போதாவது சர்வதேச சமூகம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

திருகோணமலையில் தியாகி திலீபன் நினைவு ஊர்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மீதான தாக்குதலில் கைதான சிங்களவர்களைப் பிணையில் விடுவிக்க நீதிமன்றில் பொலிஸார் முன்வைத்த சமாதானக் குலைவுக் கதையும் சிங்கள – பௌத்த சித்தாந்தத்துக்கு எதிராக இலங்கையின் எந்தவொரு அரச திணைக்களமும் இயங்காது என்பதையே எடுத்தியம்பி நிற்கின்றது . அது மீண்டும் உண்மை என்பதை நீதிபதி ரி.சரவணராஜாவின் வெளியேற்றம் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருக்கின்றது.நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் இரு தடவைகள் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. நாடாளுமன்றம் என்ற சிறப்புரிமைக்குள் நின்றுகொண்டு முன்னாள் கடற்படைத் தளபதியும் இப்போதைய ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, தமிழ் நீதிபதி என்று சுட்டிக்காட்டி நேரடியாக அச்சுறுத்தல் விடுத்திருந்தார். அவரது அச்சுறுத்தலை சட்டத்தரணிகளைத்தவிர வேறு எவரும் கண்டுகொள்ளவில்லை. ஏனெனில் நாட்டின் ஜனாதிபதியும், சபாநாயகருமே நீதித்துறையின் சுயாதீனத்துக்கும் அச்சுறுத்தல் மிரட்டல் விடுக்கும் வகையில் கருத்துகளை வெளிப்படுத்தும்போது , சரத் வீரசேகர போன்றவர்கள் தமிழ் நீதிபதிகளைக் குதறும் வகையில் பேசுவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது, நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் இருக்கின்றது. எனவே நாடாளுமன்றத்தின் தீர்மானத்தை எவர் சவாலுக்கு உட்படுத்தினாலும் அதை ஏற்கப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது மிரட்டியிருந்தார். ஜனாதிபதியின் கருத்தையே நாடாளுமன்றில் தனது அறிவிப்பாக சபாநாயகரும் விடுத்திருந்தார். இப்படிப்பட்ட நாடாளுமன்றத்திலும், அரசாங்கக் கட்டமைப்பிலும் உள்ளடங்கியுள்ள வீரசேகர போன்ற ஒருவர் தமிழ் நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.இங்கே ஜனாதிபதியோ, சபாநாயகரோ அல்லது வீரசேகரவோ மாற்றப்படுவதால் இத்தகைய அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் வராதுவிடும் என்று நினைத்துவிடக்கூடாது. சிங்கள – பௌத்த சித்தாந்தத்திலிருந்து அரச நிறுவனங்களும், அந்த மனோநிலையிலிருந்து சிங்கள மக்களும் வெளிவரும்போதுதான் மாற்றங்கள் ஏற்படும். ஆட்சிமாற்றங்கள் ஊடாக இதற்குத் தீர்வு கிடைக்காது என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்வது மாத்திரமல்லாது தமிழ் மக்களும் இதனை ஆழமாக விளங்கிக்கொள்ளவேண்டும். இப்போதைய ஆட்சியாளர்கள் மோதகம் என்றால் அடுத்து வரும் ஆட்சியாளர்கள் கொழுக்கட்டையாகவே இருப்பார்கள். அவர்களின் உள்ளீடான சிங்கள– பௌத்த சித்தாந்த மகாவம்ச மனோநிலை மாறவே மாறாது. வெறுமனே ஆட்சியாளர்களை –ஆள்களை மாற்றுவதால் நீதிபதி ரி.சரவணராஜா போன்றவர்களின் வெளியேற்றத்தைத் தடுக்கமுடியாது.



நாளொரு நல்வார்த்தை

படிப்பில் வரும் வித்தைகளை விரும்பு
உலகம் விந்தையென வியக்குமாறு
புதுமையான காரியங்களை
செய்யவே ஆசைப்படு.
- ஔவையார்-



# நீதிபதியின் வெளியேற்றம் எதேச்சாதிகாரத்தின் வெளிப்பாடு

## என்கிறார் சித்தார்த்தன்

**யாழ்ப்பாணம், செப். 30**

**நீதியை நிலைநாட்டியமைக்காக உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டு நாட்டிலிருந்து நீதிபதி ஒருவர் வெளியேறுகின்றார் என்றால் நாட்டில் எதேச்சாதிகாரம் தலைவிரித்தாடுகின்றது என்பதுதான் அர்த்தம்- இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லாத நிலைமையில் சாதாரண மக்கள் எவ்வளவு தூரம் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகுவார்கள் என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும். 1980களிலிருந்து தமிழ் இளையோர் நாட்டை விட்டு புலம் பெயர்ந்துகொண்டிருக்கின்றனர். இப்போது நீதிபதி புகலிடம் தேடி இன்னொரு நாட்டுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழர் பிரதேசத்தில் அத்துமீறி விகாரை அமைத்தமை தொடர்பில் நீதியின் பக்கம் நின்று செயற்பட்ட ஒருவர் நாட்டில் தனக்கு உயிர் அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டு வெளியேறியிருக்கின்றார். இது நாட்டில் மத மற்றும் மொழி ரீதியாக அரசாங்கத்தின் ஆதரவுடன் எவ்வளவு தூரம் எதேச்சதிகாரப் போக்கு முன்னெடுக்கப்படுகின்றது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் - என்றார். (ஒ-125)

# கடும்போக்குவாதத்துக்கு நீதித்துறையும் விதிவிலக்கல்ல

## கவலையடைவதாக அங்கஜன் தெரிவிப்பு

நீதிபதி சரவணராஜாவின் பதவி துறத்தலானது, பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இலங்கையின் அனைத்து அரச நிறுவனங்களும் செயற்படவேண்டும் என்ற கடும்போக்குவாதத்தை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. அந்தக் கடும்போக்கு வாதத்துக்கு நீதித்துறையும் விதிவிலக்கல்ல என்ற துர்ப்பாக்கிய நிலையைக் கண்டு நான் பெரிதும் கவலையடைந்துள்ளேன். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

'நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதித்துறையை கேலிக்குள்ளாக்கிய ஒருவரது நிலைப்பாட்டுக்கு அமைவாக நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களமும் செயற்பட்டுள்ளமை அதிர்ச்சியைத் தருகிறது. குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு சட்டமா அதிபர் மட்டத்திலிருந்தும், அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளமையானது மோசமான அதிகாரத் துஷ்பிரயோகமாக அமைகிறது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-100)

**நாளை** 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை புரட்டாதி 14

சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதியோர் தின நிகழ்வுகள்

கொழும்பு, செப்.30
சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மாவட்டச்செயலகமும் மாகாண சமூக சேவைத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைத்திணைக்களமும் இணைந்து வருடம் தோறும் முதியோர்களின் உள மற்றும் உடல் ஆரோக்கியத்தை பேணும் வகையில் முன்னெடுக்கும் முதியோர் தின நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க வளாகத்தில் மாவட்ட சமூக சேவைத்திணைக்கள உத்தியோகத்தர் சுப்பிரமணியம் ஜெயானந்தராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுகள், வில்லிசை, பட்டிமன்றம், கூத்து, வினாடி வினாப் போட்டி, பண்ணிசை ஆகிய போட்டிகளில் முதியோர்கள் பங்குபற்றி தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியிருந்தனர். (எ-113)

# ஆரோக்கிய மீளெழுச்சிக்கு பாடசாலைத் தோட்டங்கள்!

## செயற்றிட்டம் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், செப். 30**
**நின்று நிலைக்கக்கூடிய சுயபொருளாதார ஆரோக்கிய மீளெழுச்சிக்கு மாணவர்களை ஊக்கப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பாடசாலைகளில் தோட்டங்களை நிறுவும் செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

விவசாயத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், சுதேச மருத்துவத் திணைக்களம், கல்வித் திணைக்களம் என்பன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.
இந்தத் திட்டம் வடமாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.
போசாக்கு நிலையை மேம்படுத்தல், ஆரோக்கியமான உணவுப்பழக்கத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் வருமானமீட்டுதல் என்பவற்றை மாணவர்களிடையே ஊக்கப்படுத்துவதே இந்தச் செயற்றிட்டத்தின் பிரதான இலக்குகளாகும்.



இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது அந்தந்தப் பிரதேசத்துக்குரிய பயிர்களைத் தேர்ந்தெடுத்து உள்ளூர் வளங்களைப் பாவித்து இயற்கை முறையில் பீடைக்கட்டுப்பாடு மற்றும் சேதனப் பசளைகளை உற்பத்தி செய்து பயன்படுத்தி வினைத்திறனான நிலப்பயன்பாட்டுடன் நஞ்சற்ற மரக்கறிவகைகளை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.
இதில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். (ச-9)

# பொன்சேகாவே சிறந்த தலைவர்

## மேர்வின் புகழாரம்

கொழும்பு, செப்.30
நாட்டில் தற்போது உள்ள தலைவர்களில் நாட்டை நிர்வகிக்கக்கூடிய சிறந்த தலைவரே சரத் பொன்சேகா என்று புகழாரம் சூட்டியுள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.
பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தவர், போரை முடிவுக்குக் கொண்டுவர பங்களிப்புச் செய்தவர். அதனால் அவருக்கு பீல்ட்மார்ஷல் பதவி வழங்கப்பட்டமை தொடர்பில் முன்வைக்கப்பட்டுவரும் விமர்சனங்களை மைத்திரி நிறுத்த வேண்டும் எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டார். (எ-44)

# சிறுபிள்ளைத்தனத்தை சஜித் விடவேண்டும்!

## கூறுகிறது ஐ.தே.க.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சிறுபிள்ளைத்தனமாகச் செயற்படுவதை நிறுத்தி நாட்டை நிர்வகிக்கக்கூடியவருக்கு இடமளிக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் கூட சஜித் பதுங்குவார், போட்டியிட மாட்டார்.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது:
சமூக ஊடகங்களை கண்காணிக்க பொறிமுறை அவசியம். கருத்துச் சுதந்திரத்துக்கு மதிப்பளிக்கின்ற அதேவேளை அந்த சுதந்திரம் எல்லைமீறாத வகையில் பாதுகாக்கவேண்டும்.
சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த முற்பட்டால் போராட்டம் வெடிக்கும். அதற்குத் தான் தலைமை தாங்குவேன் என எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்துள்ளார். சிறுபிள்ளைத்தனமாகச்செயற்படுவதை அவர்நிறுத்த வேண்டும். நாட்டை நிர்வகிக்கக் கூடியவருக்கு இடமளிக்க வேண்டும் - என்றார். (ச-44)



# சுதந்திரக் கட்சி நிகழ்வில் பங்குகொண்ட சந்திரிகா

கொழும்பு, செப்.30
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் கடும் விமர்சனங்களை முன்வைத்துவந்த அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரி பங்கேற்றிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டுள்ளார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுனரும், முன்னாள் பிரதமருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 64 ஆவது நினைவு தினம் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது..
அதையொட்டி ஹொரகொல்ல பகுதியில் அமைந்துள்ள பண்டாரநாயக்கவின் சமாதியில் நினைவுகூரல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
கடந்த காலங்களில் பண்டாரநாயக்கவின் ஜனன தினம், சிரார்த்த தினம் என்பன சந்திரிகா தலைமையிலும், மைத்திரி தலைமையிலும் இரு அணிகளாக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வந்தன.
இந்தநிலையில் இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஓர் அணியாக நிகழ்வை நடத்தியுள்ளது. முன்னாள் அமைச்சர் குமார் வெல்கமவும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார். பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய, ஜி.எல். பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (எ-44)

# டிஜிற்றல் பொருளாதாரம் கட்டியெழுப்ப கண்காட்சி

கொழும்பு, செப். 30
இலங்கையில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும் டிஜிற்றல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையிலும் 'INFOTEL தகவல் தொழில்நுட்பக் கண்காட்சி' எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதிவரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டிஜிற்றல் மயமாக்கப்பட்ட நவீன இலங்கையைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில்சபையின் ஏற்பாட்டில் 'டிஜிற்றல் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்' என்ற தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.
நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.
இந்தக் கண்காட்சி டிஜிற்றல் பொருளாதாரம், இணைய இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல், டிஜிற்றல் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், பாதுகாப்பான டிஜிற்றல் கட்டமைப்புகள் மற்றும் தீர்வுகளைப் பாதுகாத்தல், பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு இந்தக் கண்காட்சி சிறந்த வாய்ப்பை வழங்கும்.
2030 ஆம் ஆண்டுக்குள் டிஜிற்றல் மயமாக்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கான அரச வேலைத்திட்டத்தை வெற்றிகொள்ளும் நோக்குடன் இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
டிஜிற்றல் பொருளாதாரத்தின் ஊடாக நாட்டுக்கு 15 பில்லியன் அமெரிக்க டொலரை அரசவருமானத்துக்கு அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ச-44)



# கிளிநொச்சியில் சிறுவர் சந்தை!

கிளிநொச்சி, செப். 30
கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள இலக்கம் ஒன்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சிறுவர் சந்தை நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. சிறுவர்களுக்கான ஊட்டச்சத்துப் பொருள்கள், மரக்கறிகள், நாளாந்த வீட்டுத்தேவைப் பொருள்கள் இதன்போது விற்கப்பட்டன. (ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18. 2ம் குறுக்குத் தெரு வீதியில் 27 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கணபதிப்பிள்ளை செல்லையா என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கிழக்கு இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த கந்தசாமி பூபாலசிங்கமும் மனைவி சுந்தரலட்சுமி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு செல்லையா கணபதிப்பிள்ளை முகதாவில் 01.08.2013ம் திகதியிட்ட 2926ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கந்தசாமி வரச்செல்வத்திற்கும் மனைவி மகேஸ்வரிக்கும் வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குழி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை "புளியடி வளவு" நிலப்பரப்பு ஒன்று (1)குழி இரண்டு தசம் எட்டு ஒன்பது (2.89). இவ்வாதனத்தை நில அளவையாளர் பி.தனராசா அவர்களால் 2012ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆம் திகதியன்று அளந்து வரையப்பட்ட 3393ஆம் இலக்க அளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டியுள்ளார். இவ்வாதனத்திற்கான எல்லைகள்.

| | |
|---|---|
| வடக்கு :- | நடராசா மனைவி பாலகுனேஸ்வரிக்குரிய ஆதனம். |
| கிழக்கு :- | 2ம் குறுக்குத் தெரு. |
| தெற்கு :- | ஒழுங்கை. |
| மேற்கு :- | தங்கவேலு மனைவி யோகேஸ்வரிக்குரிய ஆதனம். |

மேலே சொல்லப்பட்ட நான்கு எல்லைகளும் சேர்ந்த நிலம் பயிர் வகைகளடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை கந்தசாமி வரச்செல்வமும் மனைவி மகேஸ்வரியும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி வரச்செல்வமும் மனைவி மகேஸ்வரியும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(cr 40670) (N-1)

# புத்தக அரங்க விழா 3 ஆம் நாள் நிகழ்வு

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகிய இந்த அரங்க விழா நாளை ஞாயிற்றுக்கிழமை வரை 4 தினங்கள் நடைபெறுகின்றது. மூன்றாம் நாள் நிகழ்வுகளாக, 'ஈழத்து நூல்களை அறிவோம்' எனும் தலைப்பில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் தொல்புரம் கலாலயம் நாடக மன்றத்தின் தலைவருமான கலைவாரிதி எஸ்.உதயச்சந்திரனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து, மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், ஆசிரியர் பு.கணேசராசாவால் எழுதி, நெறியாள்கை செய்யப்பட்ட தேசிய அளவில் பல விருதுகளையும் வென்ற 'தலையெழுத்து' நாடகமும், குந்திதேவி' நாடகமும் இடம்பெறவுள்ளன என்று தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (ச)

## ஈர விழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவு



மலர்வு 02 . 04 . 1975

உதிர்வு 21 . 09 . 2021

**அமரர் பாலசுப்பிரமணியம் பிறேம்லால்**
**(மக்கள் வங்கி உத்தியோகத்தர்)**

**திதி : அபரபக்க பிரதமை**

ஆண்டிரண்டு சென்றாலும்
ஆறிடுமோ எம்மனது
ஆறாத துயரோடு வாழ்கின்றோம்
நேற்றுப்போல் எல்லாம்
எம் நெஞ்சோடு நினைவிருக்க
காற்றுப்போல் வந்து காலன் கவர்ந்தது ஏன்?
எதிர்பாராத நோய் வந்து நடை இழந்து
சுகமிழந்து நொந்து நீரும்
மண்ணுலகம் வெறுத்தீரோ

உம் பிரிவால் வாடும்...
குடும்பத்தினர்.

04, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(CS 26404) A-1

## காணி விற்பனைக்கு

யாழ். மணிக்கூட்டு வீதியில்
2 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.

**077 710 2692**

(cs 52323) (N-1)

## Top Atlaais

A/C, Fridge போன்ற குளிர்சாதன உபகரணங்கள். உத்தரவாதத்துடன் திருத்தி கொடுக்கப்படும். Home Wiring, plumbing செய்து கொடுக்கப்படும்.

**076 354 6157**

(cs 52323) (N-1)

## காணி பராமரிப்பதற்கு ஆள் தேவை


மன்னார் நகர பட்டணத்தில் தங்கியிருந்து 5 ஏக்கர் காணி பராமரிப்பதற்கு குடும்பமாகவோ அல்லது தனியாகவோ ஆண் தேவை. வீடு, மின்சாரம், குடிதண்ணீர் உள்ளடங்கலாக தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: **077 382 2061**

(cs 52318) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 • 01 • 1929



மறைவு 28 • 09 • 2023

**சுப்பையா குமாரசாமி**

(முன்னாள் தலைவர், தாவடி வடக்கு விவசாய சம்மேளனம்)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், தவாடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா குமாரசாமி அவர்கள் நேற்றுமுன்தினம் (28.09.2023) வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நீர்வேலி வடக்கு காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், வாசுகி (டென்மார்க்), காலஞ்சென்ற செந்தில்நாதன், வளர்மதி (சுமதி), சிவதாசன் (டென்மார்க்), சிவசங்கர் (கனடா), கிரிதரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசரட்ணம் (டென்மார்க்), குகநேசன் (தொழில்நுட்பவியலாளர், விவசாய ஆராய்ச்சி நிலையம் - திருநெல்வேலி), அனுஷா (டென்மார்க்), மதிவதனா (ஆசிரியை - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், தாரகன், ஆரணன், மாதுளன், பிரவணவன், சாமந்தி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, யோகம்மா, நல்லம்மா, நவரத்தினம், இராசம்மா, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நல்லம்மா, பேரம்பலம், மனோன்மணி, விமலாதேவி, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**73, வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு,**
**கொக்குவில்.**

தகவல்:
குடும்பத்தினர்
**077 773 3790, 077 979 7448**

(cs.52319) (N.1)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் • 17 • 08 • 1959

விண்ணில் • 10 • 10 • 2022

**வேகாவனம் ரஞ்சினிதேவி**

**திதி: அபரபக்க துதியை**

ஆண்டொன்று ஆனாலும்மனம் ஆற மறுக்கிறது அம்மா...
புன்னகை புரியும் உங்கள் முகம்தெரிகிறது தினம் தினம்...
உம்மை இழந்த துயரைஈடு செய்ய முடியாமல் தவிக்கின்றோம்...

அன்பாலும் பண்பாலும் அரவணைத்துவாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!இன்று பிரிவு என்னும் துயரால்
ஓராண்டு ஓடி மறைந்தாலும்நெஞ்சில் பதிந்த உம் நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**இல.208, சிவன் கோவிலடி,**
**உக்கிளாங்குளம், வவுனியா.**
**076 4[illegible]3 6260**

**பிரிவால் துயருறும்**
**அன்புக் கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS ) N.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் சிறிசற்குணராஜா, கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
(ய-13)



மிருசுவில் தவசிகுளம் கண்ணகை அம்பாள் கோயில் மஹோற்சவத்தின் நான்காம் திருவிழா அண்மையில் நடைபெற்றது.
(ய-9)




அண்மையில் காலையடி - பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் இடம் பெற்ற யானைத் தாத்தா தேவன் பூதனாரின் இரு பிள்ளைப் பாடல் நூல்கள் மற்றும் ஒலிப்பேழை வெளியீட்டு நிகழ்வின் காட்சிகள்.
(ய)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு, புனித திருத்தலத் தரிசன யாத்திரை இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் அண்மையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமானது.
(ய-66)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றம் அண்மையில் அதிபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.
(ய-159)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் திருக்கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் அண்மையில் மயூரதி குகனேஸ்வரன் பக்க வாத்திய சகிதம் தெய்வீகப் பாடல்களைப் பண்ணுடன் பாடினார்.
தொடர்ந்து விஸ்வநாத ஐயர் சிவகுமார் பக்கவாத்திய சகிதம் சிறப்பாக மெண்டலின் இசைத்தார்.
(ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நூற்றாண்டு நிகழ்வுகள் கலாசாலையில் நாளை

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவுறுவதையொட்டிய கல்லூரி தின நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம், கௌரவ விருந்தினராக நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் சாந்தினி வாகீசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் கலாசாலையின் ஓய்வுநிலை பிரதிமுதல்வர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு எழுதிய 'வடக்கின் ஆசிரிய கலாசாலைகள்' கோப்பாய் ஆசிரிய கலாசாலை பற்றிய சிறப்பாய்வு நூல் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் 'கலாதீபம்' மாத இதழின் கல்லூரித் தின சிறப்புப் பிரதியும் வெளியிடப்படவுள்ளது. தொடர்ந்து சமயத் தலைவர்களின் ஆசியுரை, நூற்றாண்டைக் குறிக்கும் முகமாக 100 நிறைகுடங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களுடனான ஊர்வலம் என்பன இடம்பெறவுள்ளன. (ச)

## சிங்களமொழிக் கற்கைக்காக மாணவர்களுக்குச் சான்றிதழ்



யாழ்ப்பாணம், செப். 30

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் மொழிகள் மற்றும் சமூக அபிவிருத்திப் பயிற்சி மத்திய நிலையத்தில் சிங்களமொழிக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த சுமார் 300 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மானிப்பாயில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் சபாநாயகரும் சூரிய கற்கைகள் நிறுவகத்தின் இயக்குநருமான கருஜெயசூரிய, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், வலி.தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன், வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் உட்படப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-27-125)

## வல்லிபுரத்து ஆழ்வாருக்கு நேற்று சமுத்திரத் தீர்த்தம்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்த உற்சவம் நேற்று மாலை இடம்பெற்றது.

கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வல்லிபுரத்து ஆழ்வார் திருவிழாவின் 16ஆம் நாளான நேற்று, புரட்டாதிப் பௌர்ணமியில் தீர்த்த உற்சவம் இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர்கள் திருவிழாவில் சிறப்பு பூசைகளை மேற்கொண்டனர். இலங்கை போக்குவரத்துச் சபை, வடமராட்சி தனியார் போக்குவரத்துச் சேவை என்பன அடியவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகளை வழங்கியிருந்தன.

பல அடியார்கள் தூக்கு காவடி, பாற்காவடி, கற்பூரச் சட்டி போன்ற பல்வேறு நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றினர். (ம-27)

## கச்சேரியில் தோன்றிய 'காதலி'




யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் கலந்துரையாடலில் 'கதலி' வாழைக்கு பதிலாக 'காதலி' வாழை திரையில் தோன்றியது.

பிரதம திட்டமிடல் கிளையினர் தாங்கள் பெற்றுக்கொண்ட விடயங்களை உயர் கலந்துரையாடல் ஒன்றுக்கு சமர்ப்பிக்கும்போது திரும்ப மேற்பார்வை செய்ய வேண்டும். திரும்ப மேற்பார்வை செய்யப்படாத சமர்ப்பித்தல்களாலேயே இவ்வாறான தவறுகள் சம்பவிக்கின்றன என்று கூட்டத்தில் கலந்துகொண்டோர் சுட்டிக்காட்டினர். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்கள் இறக்குமதி தளர்த்த வாய்ப்பில்லை!



## பதில் நிதியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 30**

**நாட்டின் தற்போதைய நிலைமையில் வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்று பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**


ஜனாதிபதி ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதித் தடைகள் அடுத்த மாதத்துக்குள் நீக்கப்படும்.

நாட்டின் அந்நியச் செலாவணியின் கையிருப்பைக் கருத்திற்கொண்டே, இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து தீர்மானங்கள் எடுக்கப்படும்.

எதிர்பார்த்த அளவு பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரித்ததன் பின்னர், வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளைப் படிப்படியாக நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்- என்றார். (ச-இ)



வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனாதன் அலஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை ஹற்றன் நஷனல் வங்கியின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போது வடமாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ச-27)


**விதைநெல் விற்பனைக்கு**

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிவிளைச்சலைக் கொண்ட B. G.34.6 இன மூன்றரை மாத விதைநெல் விற்பனைக்குண்டு.

**077 659 2044**


## வலையைத் திருடி விற்பனை சந்தேகநபர்கள் கைது

மன்னார், செப். 30

சௌத்பார் கடற்கரையில் உலரவிட்டு இருக்கும் மீன்பிடி வலைகளைத் திருடி விற்பனை செய்து வந்த நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வலைகளைத் திருடி மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள தேவன்பிட்டியில் விற்பனை செய்ய முற்பட்டபோதே இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சவுத்பாரைச் சேர்ந்த 25 மற்றும் 22 வயதுடைய நபர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-213)


## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 10 . 1941

மறைவு 27 . 09 . 2023

### சண்முகம் சரவணமுத்து

**(முன்னாள் இ.போ.ச. சாலைப் பரிசோதகர்- மன்னார், முன்னாள் ஆங்கில ஆசிரியர், முன்னாள் சிரேஷ்ட போதனாசிரியர், தொலைக்கல்வி யாழ்ப்பாணம்)**

யாழ். கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.35, மூத்த விநாயகர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சரவணமுத்து (முன்னாள் இ.போ.ச. சாலை பரிசோதகர் - மன்னார், முன்னாள் ஆங்கில ஆசிரியர், முன்னாள் சிரேஷ்ட போதனாசிரியர் - தொலைக்கல்வி யாழ்ப்பாணம்) அவர்கள் கடந்த (27.09.2023) அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் அம்மாக்குட்டி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அரியமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னம்மா, லட்சுமி, தம்பையா, சின்னத்துரை, பொன்னுத்துரை, பரமேஸ்வரி, ராஜேஸ்வரி, சொல்வேந்தன் மற்றும் இராசமணி, மங்கையற்கரசி, சரட்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான Rev.அல்பிரட் சின்னையா, கோமகன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஈஸ்ரரின் அஜித்தா (Property Manager - London), டினேஸ்ரூபசிங்க (Incom Tax officer-Canada), அமரன் கிறிஸ்ரி (Engineer - London), சிறில் அமலன் (Lawyer) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுரேஸ் (Accountant - London), Dr.சாந்தினி (Canada), கோமதி (Accountant - London), சர்மிளா வலன்ரின் (Clerk Magistrate's court, Jaffna.) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், Dr.கௌசி (London), கௌதமன் (Medical University of Plovdiv), எழில்மதி (Canada), அபிஷா, விதுரா (London), யனுஷனா, மதுசாரா மாணவிகள் (Angel Inetrnational School - Manipay) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பரி.யாக்கோப்பு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

ICS 26409TA-1



## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 31.05.1933

ஆண்டவன் அடியில் 28.09.2023

### திருமதி.சோதிமணி சச்சிதானந்தம்

உரும்பிராயை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.சோதிமணி சச்சிதானந்தம் அவர்கள் **28.09.2023** அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்ற சச்சிதானந்தம் (தபால்திபர்) அவர்களின் அன்பு மனைவியும், உரும்பிராய் செல்லப்பா லச்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், வறுத்தலைவிளான் சபாபதிப்பிள்ளை மற்றும், தங்கம்மா ஆகியோரின் மருமகளும், சற்குணமணி மற்றும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், மனோண்மணி, தனபாலசிங்கம், குணமணி ஆகியோரின் சகோதரியும், செல்வமணி, செல்வராஜா, செல்வராணி, செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவேந்திரராஜா, சரோஜா, தயாபரநிதி, சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், மாலினி, சஞ்ஜீவன், சுதாகரன், சசிகரன், ஜெனிற்றா, அனிற்றா, ஹரிகரன், ராஜ்கரன், கோபிநாத், திவியநாத், மிதூஷன், பிரகட்சன் ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும், ஷானிக்கா, அஸ்விகா, அனுஷ்கா, அக்சரா, பவிற்றா, புவிராஜ், ஜஸ்வித்தா, சதுர்ஜன், சார்மிகா, அஜித்தா, அணீஸ், மோனிஷா, அஜேய், அஸ்வின், அமேஷா, சனாஜா, ஆரியன், ஆதவ், அனிஸ், ஆதியா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் **30.09.2023** பி.ப.**2.00** மணிமுதல் **6.00** மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் **01.10.2023** ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப.**10.00** மணிமுதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப.**2.00** மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

முகவரி: இல 03- 5/1
பம்பலபிட்டிய டெறெஸ்
கொழும்பு - 04

தொடர்பு
**077-7328583** (மருமகன்)
**077-0396270** (மகன்)
**0014164576042** (மகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

தமிழ்த் தேசியக் கட்சியின் அழைப்பின் பெயரில் ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுமாலை சுமார் ஒரு மணிநேரம் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன் போதே பேரினவாதம் நீதித்துறை மீது முன்னெடுக்கும் அழுத்தம் தொடர்பிலும், நீதிபதி சரவணராஜாவுக்கு நேர்ந்த நிலை தொடர்பிலும் விரிவாக விவாதிக்கப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மிக விரைவாக ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் மேற்கொண்டு பேரினவாதத்தின் நிகழ்காலப் போக்குக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணம், மருதனார்மடத்திலிருந்து யாழ். நகர் வரையில் மிகப்பெரும் மனிதச்சங்கிலிப் போராட்டத்தை நடத்துவது, தூதரகங்களைச் சந்தித்து நீதித்துறை மீது தற்போது முன்வைக்கப்பட்டுவரும் அழுத்தம் தொடர்பில் தெளிவூட்டுவது, மனித உரிமைகள் அமைப்புகளுடன் தொடர்ச்சியாகப் பேச்சை நடத்துவது, ஐக்கிய நாடுகள் சபையில் முறையிடுவது போன்ற நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக முல்லைத்தீவில் பெருமளவான மக்களை ஒன்றிணைத்து போராட்டத்தை பெருமெடுப்பில் நடத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஜனநாயகப் போராளிகள் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளே இந்த முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளன.

தமிழரசுக் கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், புளொட் அமைப்பில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கஜதீபன், ரெலோவின் சார்பாக தி.நிரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடமாகாணசபையின் முன்னாள் அமைச்சர் சர்வேஸ்வரன், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சிறீகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## சிங்கள-...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நீதிபதி சரவணராஜா குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்தால் சிங்கள - பௌத்தத் தேசியவாத நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட மீறல்களை வெளிப்படையாகக் கண்டனம் செய்து, நியாயமான தீர்ப்புகளை வழங்கிய நீதிபதி. தமிழ் மக்களின் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு அரசால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட போதெல்லாம் மக்களின் நினைவேந்தல் உரிமையை உறுதிப்படுத்தித் தீர்ப்புகளை வெளியிட்ட ஒருவர். இவ்வாறான நேர்மையும், துணிச்சலும் மிக்க நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் தென்னிலங்கையில் உள்ள தீவிர சிங்கள தேசியவாத சக்திகள் வெறுப்புப் பரப்புரைகளை அண்மையிலே முன்னெடுத்திருந்தன.

வடக்கு - கிழக்கில் பணியாற்றும் நீதிபதிகள் அச்சுறுத்தப்படுவதற்கு அடிப்படையான காரணமாக அமைவது இலங்கை அரசினது சிங்கள - பௌத்த நிகழ்ச்சி நிரலே. தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தப் பிரதேசத்தை சிங்கள - பௌத்த மயமாக்குவதும், தமிழ் மக்களின் நினைவேந்தல் செயன்முறைகளை வலிந்து தடுத்தலும் இந்த நிகழ்ச்சி நிரலின் பகுதிகளாகும். இந்த நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போகாத நீதிபதிகளும், ஏனைய அரச ஊழியர்களும் பல்வேறு வழிகளில் அச்சுறுத்தலுக்கும், அழுத்தத்துக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகின்றனர். சிங்கள - பௌத்த மேலாதிக்கம் ஒழியும் வரை வடக்கு - கிழக்கிலே நீதித்துறையும் ஏனைய நிர்வாகத்துறைகளும் பாதிப்பையே எதிர்கொள்ளும்.

அழுத்தத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் நீதிபதி சரவணராஜா மீளவும் தன் பதவிக்குத் திரும்பி, சுயாதீனமான முறையில் தனது கடமைகளைச் செய்யக்கூடிய நிலையை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்தவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

## தேடப்பட்ட...

கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்களுக்கமைய, பேருந்தொன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து ஒக்ரோபர் 12ஆம் திகதிவரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-113)

## சிவன்கோவில்...

செல்வபுரம் சிவன்கோவில் காணிக்குள் தனியார் ஒருவரும் குடியிருந்து வருகின்றார். அவருக்கும் சிவன்கோவில் ஆலய நிர்வாகத்துக்கும் இடையில் மீள் குடியேற்றத்துக்குப் பின்னர் பிணக்கு நிலவி வருகின்றது. ஆலயத்தின் ஒருபகுதி சிவன் கோவிலுக்கும் மறுபகுதி தனியாருக்கும் என்றவாறாகப் பிணக்கு முடிவுறுத்தப்பட்ட பின்னரும், காணியின் பெரும் பகுதிக்கு தனிநபர் சொந்தம் கொண்டாட எத்தனிக்கின்றார் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த நிலையிலேயே சர்ச்சைக்குரிய காணிக்குள் புத்தர்சிலை ஒன்றை வைப்பதற்கு அந்தத் தனிநபர் நேற்று நடவடிக்கை எடுத்துள்ளார். எனினும் பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியதையடுத்து அந்த நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. (அ-ம-113)

## நித்தியஶ்ரீயின்...

ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் முக்கியமான உற்சவமான கப்பல் திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

தவில், நாதஸ்வரக் கச்சேரியைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று, தொடர்ந்து நாகேஸ்வரப் பெருமான் பரிவார மூர்த்திகளுடன் உள் வீதி உலா வரும் வேளை வடக்கு வீதியில் விசேட தவில், நாதஸ்வரக் கச்சேரி இடம்பெற்று மாலைத் திருவிழா முடிவடையும்.

இதனைத் தொடர்ந்து இரவு விசேட தவில், நாதஸ்வரக் கச்சேரி இடம்பெற்று அதனைத் தொடர்ந்து தமிழக தென்னிந்திய கர்நாடக, பக்திப் பாடகி நித்யஶ்ரீயின் இசைக் கச்சேரி இடம்பெற உள்ளது. அதனைத் தொடர்ந்து மறுநாள் அதிகாலை இரண்டு மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து நாகேஸ்வரப் பெருமான் வெளிவீதி உலாவரும் வேளையில் வடக்கு வீதியில் அதிகாலை 4 மணியளவில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கப்பல் ஆட்டம் வைபவம் இடம்பெறும். இந்தத் திருவிழாவுக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-100)

## அதிகளவு...

மானிப்பாய், சுதுமலையில் நேற்று இடம்பெற்ற இரண்டாம்மொழிக் கற்கையைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை விவகாரத்தில் இனவாதியான சரத் வீரசேகர தொடர்ச்சியாக இனவாதக் கருத்துகளை வெளிப்படுத்தினார். எவரும் அவரைக் கட்டுப்படுத்தவில்லை. நீதிபதிக்கு எதிராகவும் நீதிமன்றத்துக்கு எதிராகவும் அவர் தொடர்ந்து சிங்கள மக்களைத் தூண்டிவந்தார். இதன் விளைவாக நீதிபதி சரவணராஜா இன்று நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். செம்மணிப் படுகொலை புதைகுழி மீட்பின்போது செயற்பட்ட நீதிபதி அருள்சாகரனும் இவ்வாறு அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறினார். இதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து சிங்கள மக்களுக்கு உண்மையையும் யதார்த்தத்தையும் புரிய வைப்பதற்கு இரண்டாம் மொழியறிவு எமக்குத் தேவைப்படுகின்றது.

இரண்டாம் மொழியறிவை தமிழர்களான நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், அதை முதல் தெரிவாகத் திணித்துப் பலவந்தப்படுத்தியபோது நாங்கள் எதிர்த்தோம். உண்மையில் நாங்கள் எதிர்த்தோம் என்பதைவிட எம்மை எதிர்க்கப் பண்ணினார்கள் என்பதுதான் இங்கு பொருத்தமாக இருக்கும். பண்டாரநாயக்க தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது நாங்கள் எங்கள் எதிர்ப்பை முழுமையாக வெளிப்படுத்தினோம். இன்று இந்த மொழியறிவை பரஸ்பரம் ஏற்படுத்துவதில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய முன்னின்று தொடர்ச்சியாகச் செயற்படுகின்றார் - என்றார். (அ-ம-125)

## உருக்குலைந்த...

யிலேயே சடலம் மீட்கப்பட்டது. சடலம் எவருடையது என்ற தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-213)

## மாணவி...

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலையொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

13 வயதான அந்த மாணவி கடந்த 25ஆம் திகதி தனது வகுப்பு மாணவர்களுக்கு சொக்லெட் வழங்கியுள்ளார். அவர் 14 வயதுடைய மேற்படி மாணவனுக்கும் (தாக்குதலுக்கு உள்ளானவர்) சொக்லெட் வழங்கியுள்ளார். இதையடுத்தே எதற்காக சொக்லெட்டை வாங்கினாய்? என்று வினவி மாணவியின் 17 வயதுடைய அண்ணன் அந்த 14 வயது மாணவன் மீது நேற்று வெள்ளிக்கிழமை தாக்கியுள்ளார். இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் பொலிஸார் முறைப்பாட்டை ஏற்க மறுத்தனர் என்றும், அலைபேசி வழியாக பொலிஸ் திணைக்களத்தில் முறைப்பாட்டைப் பதிவுசெய்ய முற்பட்டபோதே முறைப்பாட்டைப் பதிவுசெய்தனர் என்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-100)

## இனப்பதற்றம்...

தொல்பொருள் சின்னங்களை இனங்களுக்கிடையே பதற்றம் ஏற்படாதவாறு பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை - இவ்வாறு அஸ்கிரிய பீடம் தெரிவித்துள்ளது.

அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் கலாநிதி மடகம தம்மானந்த தேரர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலையில் பௌத்த தொல்பொருள் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்துக்கு வெளியே ஒரு விகாரையும், இந்து ஆலயமும் அமைப்பதற்கு மூன்று ஏக்கர் காணி ஒதுக்குவது தொடர்பான பிரேரணை நாடாளுமன்றக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. தீர்மானம் எடுக்கும் போது இனங்களுக்கிடையே பதற்றம் ஏற்படாதவாறு முடிவு எடுக்கப்பட வேண்டும். குருந்தூர் விகாரை ஏற்கனவே தொல்பொருள் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தி தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (அ-ம-6)

## அனைத்து...

சிவப்பு எச்சரிக்கையே - என்று மூத்த சட்டத்தரணியும் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவருமான சிறீகாந்தா தெரிவித்தார். அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

குருந்தூர்மலை ஆலய விவகாரம் தொடர்பான வழக்கைக் கையாண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி, தனது பதவியை ராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியமைக்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது. நாடாளுமன்றத்துக்கு உள்ளே எழுப்பப்பட்ட இனவெறிக் கூச்சல்களுக்கு அப்பால், அதிகாரத் தரப்பினால், நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதிபதி மீது பிரயோகிக்கப்பட்ட உளவியல் ரீதியான அழுத்தங்களே, அவரை இந்த முடிவுக்குத் தள்ளியிருக்கின்றன என்பது தெட்டத் தெளிவானது. பௌத்த - சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அனுசரணையாக, நீதிபதி சரவணராஜா வளைந்து கொடுக்க மறுத்திருந்த காரணத்தினால்தான், அவருக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கின்றது. தமது கடமையை நேர்மையுடன் செய்ய விரும்பும் சகல நீதிபதிகளுக்கும் இது ஒரு சிவப்பு எச்சரிக்கை என்பதை தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமல்லாமல், சிங்கள மக்களும் புரிந்து கொள்ளவேண்டிய நிலைமைக்குள் முழு நாடும் இப்போது தள்ளப்பட்டிருக்கின்றது.

பல வருடங்களாக நிலவி வரும் அரச பயங்கரவாதம் என்பது, இப்பொழுது புதிய களம் ஒன்றை திறந்திருக்கின்ற நிலைமையில், சட்டத்தின் ஆட்சி தொடர்பில் எஞ்சியிருந்த நம்பிக்கைகளும் சிதறத் தொடங்கியுள்ளன. எமது மக்களைப் பொறுத்தமட்டில், குருந்தூர்மலை விவகாரத்தில் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் நேர்மையான நீதிபதிக்கு ஆதரவாகவும், அதற்கும் மேலாக, நீதித்துறையின் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் பெரும் சவாலுக்கு எதிராகவும், எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை நாம் வெளிப்படுத்தியே ஆகவேண்டும். உலக அரங்கின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் அது நிச்சயமாக வெளிப்படுத்தப்படும் - என்றுள்ளது. (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 மில்லியன் பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்பு



## தெஹிவளையில் ஒருவர் கைது

மன்னார், செப். 30

15 மில்லியன் பெறுமதியான ஐஸ்போதைப்பொருள் அடங்கிய பொதியொன்று தெஹிவளையில் மீட்கப்பட்டுள்ளதுடன் அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடற்படை மற்றும் கொழும்பு குற்றப்பிரிவு இணைந்து கடந்த புதன்கிழமை நடத்திய சோதனை நடவடிக்கையின்போது இந்தப் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

களுபோவில பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய சந்தேகநபரே போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-213)

**IELTS**

Personal / Group & Online Classes

077 114 8894

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். திருநெல்வேலி இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 3153 077 891 3745

## நீதிக்கு...

படுமளவுக்கு, அவருக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், கிளிநொச்சியில் உள்ள பழைய மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நாளைமறுதினம் காலை 9.30 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

ஈழத்தமிழர்களின் மரபுவழித் தாயகப் பகுதியான குருந்தூர்மலையின் இருப்பையும், அங்கு தமிழர்கள் வழிபாடியற்றும் உரித்தையும் நிலைநிறுத்தியதற்காகவும், தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை நடத்துவதற்கு அனுமதித்ததற்காகவும் சிங்களப்பேரினவாதத்தால் பழிவாங்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு ஏற்பட்ட இந்நிலை, தமிழினம் சார்ந்து சிந்திக்கின்ற, இனத்தின் இருப்பை நிலைநிறுத்த நியாயத்தின் பாற்பட்டு கடமையாற்றுகின்ற இன்னுமோர் தமிழ் நீதிபதிக்கு ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்த வேண்டிய கடமை எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

நீதியின் செங்கோலை, அதிகாரத் தரப்புகளுக்கும் சிங்களப் பேரினவாதத்துக்கும் சாதகமாக வளைக்க மறுத்ததற்காக ஒரு தமிழ் நீதிபதிக்கு இந்த நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், இந்த நாட்டின் சிறுபான்மை இனமாக அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஈழத் தமிழினத்தின் இருப்பு எவ்வளவு தூரம் சவாலுக்கு உட்படுத்தப்படும் என்பது பற்றி சர்வதேச சமூகத்தின் கவனத்தைக் கோரும் வகையில் இந்தக்கண்டனப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் இணைந்துகொள்ளுமாறு அழைத்துநிற்கிறோம். இனத்தின் இருப்புக்காகப் பதவி துறந்திருக்கும் நீதிபதிக்காக சர்வதேசத்தின் நீதியைக் கோரத் தவறுவது, எங்கள் இனத்தின் இருப்பை இன்னும் வலுவிழக்கச் செய்யும் என்பதை உணர்வோம், இணைவோம் - என்றுள்ளது. (அ-ம-113)

**கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள் விற்பனைக்கு உண்டு**

▲ புறொயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர் கோழி, சேவல், விறாத்து குஞ்சு, முட்டை இவை அனைத்தும்.
▲ மலிவான விலையில் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வழங்கப்படும்.
▲ 33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு இன்று முதல் எமது கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
▲ வியாபாரிகள், ஹொட்டல் தேவையை விசேட விலைக்கழிவிலும் கொள்முதல் செய்துகொடுக்கப்படும்.
▲ எமது சகல கிளைகளிலும் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், பேரன்ஸ் 1150/=

தொடர்பு: 1. நியூ சிற்றி பாம் கோழிக்கடை
இல.8, குருநகர் மீன் மார்க்கட், யாழ்ப்பாணம்.
2. நியூ சிற்றி பாம் கோழிக்கடை
இல.7, பண்ணை மீன் மார்க்கட். யாழ்ப்பாணம்.
3. நியூ சிற்றி பாம் கோழிக்கடை
இல.10, மீன் மார்க்கட், நாவாந்துறை யாழ்ப்பாணம்.
4. நியூ சிற்றி பாம் கோழிக்கடை
இல.3, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(CS 26407 A) A-1

**வேலையாட்கள் தேவை**

பலசரக்கு கடை வேலைக்கு நல்ல அனுபவம் உள்ள ஆட்கள் மட்டும் தேவை.

077 628 0685
076 915 8072

(CS 26405)A-1

**கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு**

இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **கொங்கிறீற் மிக்சர்** (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **மின்னுயர்தியும்** (Hoist) எம்மிடம் உத்தரவாதத்துடனும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: இந்தியா மற்றும் தாய்லாந்து கொங்கிறீற் மிக்சர் எம்மிடம் மட்டுமே.




**ஆர்க் என்ரபிறைசஸ்**

102, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571

Hotline: 071 535 7799 / 071 973 9917

(cs 52203) (N.1)

**வேலைவாய்ப்பு**



யாழ் நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.

1) **வரவேற்பாளர்கள்** (Receptionist)
(ஆண் / பெண் இருபாலாரும்)
2) **எழுதுவினைஞர்** (Clerk)
3) **சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்** (Marketing Officer)
4) **பணம் வசூலிப்பவர்** (Cash Collector)
5) **விளம்பர வடிவமைப்பாளர்** (Graphic Designer)
(பகல் / இரவு)

ஆர்வமுள்ளவர்கள் 02.10.2023 திங்கட்கிழமை காலை 09.00 மணிமுதல் பிற்பகல் 12.00 மணிவரை உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **24 பரப்பு (நிலப்பரப்பு)** விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 26393) A-1



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org